1980 பிப்ரவரி 13]

4. கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

ஏ. திருச்சி காவேரி ஸ்ட்ரக்சுரல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து.

[பிற்பகல் 1-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, சி. கோவிந்தராசன், கு. ரமணி ஆகியோர் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம்.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, ''திருச்சி காவேரி ஸ்டரக்சுரலில் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்து வருவதால் அங்கு நிலவும் பதட்ட நிலைமை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாயந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, திருச்சி காவேரி இஞ்ஜினியரிங் தொழிற்சாலை ஒரு இன்ஜினியரிங் நிறுவனமாகும். இதில் தொழிலாளர்களும், பணியாளர்களுமாக 1,050 பேர் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர். காவேரி ஸ்ட்ரக்சுரல்ஸ் யுனைடெட் ஒர்க்கர்ஸ் யூனியன் என்பது தான் இத் தொழிற்சாலையில் உள்ள ஒரே தொழில் சங்கமாகும். இதில் 223 பணியாளர்களும் 313 தொழிலாளர்களும் அங்கத்தினர்களாக உள்ளனர். 20—7—1978 அன்று ஏற்பட்ட 12 (3) உடன் படிக்கை 31-5-1981 வரை அமுலில் இருக்கும். அதில் நிர்வாகமும் இச் சங்கமும் கையெழுத்து இட்டுள்ளன. ஆனாலும் பணியாளர் (Staff) மற்றும் பயிற்சியாளர்கள் இந்த உடன்படிக்கையில் அடங்கமாட்டார்கள். இச் சங்கம் சம்பள விகிதங்களை உயர்த்துதல் (increase in Wages) அகவிலைப்படி உயர்வு, இரவு நேர வேலைப்படி வழங்குதல், 1978–79ம் ஆண்டுக்கான ''போனஸ்'' ஆகிய பல கோரிக்கைகளை வலியுறுத்தி 29—8—1979 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

திருச்சி தொழிலாளர் துறை துணை ஆணையாளர் இரு தரப்பினரையும் அழைத்து கோரிக்கைகள் மீது 5—9—1979 முதல் பல நாட்கள் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தினார். ஒரு சுமூகமான உடன்பாட்டிற்கு வர இயலாத நிலையில் அவர் தொழிற் தகராறு சட்டம் பிரிவு

(திரு. எஸ். இராகவானந்தம்) [1980 பிப்ரவரி 13

12 (4) ன் கீழ் தனது சமரச முறிவு அறிக்கையை அனுப்பினார். நிர்வாகம் 1—11—1979 முதல் தொழிற்சாலையை மூடி விட எண்ணி 31—8—1979ல் அறிவிப்பை வெளியிட்டது. பின்னர் இந்தத் தேதி 1—2—1980 என்று மாற்றப்பட்டது.

திருச்சி தொழிலாளர் துறை துணை ஆணையர் சமரச முறிவு அறிக்கைக்குப் பின்னும் இப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டி, மேலும் பேச்சு வார்த்தைகள் சென்னையில் தொழிலாளர் ஆணையர் ஆலுவலகத்தில் உள்ள தொழிலாளர் துறை துணை ஆணையர் (குறைந்த பட்ச ஊதியம்) மற்றும் இணை ஆணையர் ஆகியோர் முன்னிலையில் 12—11—1979 13—11—1979, 14—11—1979, 15—11—1979 ஆகிய தேதிகளில் நடைபெற்றன. இந்தப் பேச்சுக்களிலும் ஒரு உடன்பாடு காண இயலாத நிலையில் திருச்சி தொழிலாளர் துறை துணை ஆணையரின் சமரச அறிக்கையின் மேல் சம்பள உயர்வு, இரவு நேர வேலைப்படி, போனஸ் ஆகிய கோரிக்கைகள் மீது அரசுக்கு தொழிலாளர் நல ஆணையர் அலுவலகம் 30—11—1979-ம் தேதிய கடிதம் மூலம் பரிந்துரைகள் அனுப்பப்பட்டன. அரசு ஆணை எண் 2037, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை 11—12—1979ம் தேதியிட்ட உத்தரவுப்படி இக் கோரிக்கைகளை தொழில் நீதி மன்றத்திற்கு விட உத்தரவிடப்பட்டது.

சுமுகமாக ஒரு சூழ்நிலை மீண்டும் ஏற்பட பணியாளர்கள், பயிற்சியாளர்கள் வேலை பழகுவோர் ஆகியவர்கள் சம்பள விகிதங்களை மாற்றியமைத்தல், பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி, இரவு நேர வேலைப்படி ஆகியவை வழங்குதல் முன்னரே அறிவித்த போனஸ் அளவைக் கூட்டுதல் ஆகிய கோரிக்கைகளை நிர்வாகம் ஏற்றுக்கொண்டால் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்வதாகச் சங்கம் தெரிவித்தது. ஆனால் நிர்வாகத்தினர் எந்தக் கோரிக்கையையும் ஏற்க இயலாது எனத் தெரிவித்து விட்டனர்.

நிர்வாகம் 61 நிரந்தரப் பணியாளர்களை வேலை நீக்கம் செய்துள்ளது. 400 வேலை பழகுவோர்களுக்கு இப்போது வேலையில்லை எனத் தெரிவித்துள்ளது. இப்பொழுது 75 நிரந்தரப் பணியாளர்களும், 60 நிரந்தரத் தொழிலாளர்களும் 100 வேலை பயில்பவர்களும் 13—12—1979 முதல் வேலை செய்து வருகின்றனர். தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்பாத மற்ற கோரிக்கைகள் மீது மறுபரிசீலனை மனு ஒன்று அரசுக்குக் கிடைக்கப் பெற்று, தொழிலாளர் நல ஆணையரின் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இணை ஆணையர் முன்னிலையில் இது பற்றி மீண்டும் பேச்சு வார்த்தைகள் தொடரப்படுகின்றன.

1980 பிப்ரவரி 13]

திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கைப்படி அங்கு பணி புரியக்கூடிய 1,350 தொழிலாளர்களில் சுமார் 200 பேர்கள் வேலை செய்கிறார்கள் என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். அண்மையில் ஜாயின்ட் கமிஷனுடைய ஆலோசனையை இரு சாராரும், நிர்வாகத் தரப்பும், தொழிலாளர்கள் பிரதிநிதிகளும் ஏற்றுக்கொண்டு கையெழுத்திடக்கூடிய சூழ்நிலை இருந்தும் நிர்வாகத்தினர் வாபஸ் வாங்கி விட்டார்கள். பேக் அடித்துவிட்டார்கள். ஆகவே ஜாயின்ட் கமிஷனுடைய ஆலோசனையை புறக்கணித்து விட்டார்கள். இன்றைக்கு ஆயிரம் தொழிலாளர்கள் வெளியே இருக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால் நிர்வாகத் தரப்பை வலியுறுத்தி அந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, இவைகளை யெல்லாம் மனத்திற்கொண்டு நாளை மறுநாள் 15 ஆம் தேதியன்று சென்னையில் என் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

உள்ளூர்காரர்களுக்கே வேலை என்கிற கர்நாடக மாநில கொள்கை அறிவிப்பு குறித்து:

திரு. க. சுப்பு: அடுத்து நான் சொல்ல விரும்புவது ரொம்ப முக்கியமான பிரச்சினை. நம்முடைய அவையின் முன்னவர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். அதனால்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லி விட்டால் போதும்.

திரு. க. சுப்பு: கர்நாடக மாநிலத்திலே பெங்களூர், பத்திராவதி போன்ற இடங்களில் தமிழர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே ஒரு உத்தரவு முன்பே போடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. மற்ற மாநிலங்களிலேயிருந்து வருபவர்களுக்கு வேலை கிடைக்காத அளவிற்கு ஒரு உத்தரவு, அங்கே அரசு உத்தரவு ஒன்று போடப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலே அப்படியிருப்பதாகச் சொல்லிக் கொண்டு அப்படிப் போடப்பட்டிருக்கிறது. நான் போய் இருக்கும் பொழுதுகூடச் சொன்னார்கள்.